**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 360** **நாள்: 04.11.2025**

**வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம் (Special Intensive Revision) தொடர்பாக சென்னை மாவட்டத்தில் 40,04,694 வாக்காளர்களுக்கு 3,718 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலமாக கணக்கீட்டுப் படிவம் வீடு வீடாக சென்று வழங்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.**

இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தலின்படி வாக்காளர் பட்டியல் **சிறப்பு தீவிர திருத்தம்** (Special Intensive Revision) தொடர்பாக சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வாக்காளர் கணக்கீட்டுப் படிவம் (Enumeration Form) வீடுவீடாக வழங்குவது தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி பல்வேறு கட்டங்களாக 28.10.2025 முதல் 07.02.2026 வரை நடைபெறுகிறது. வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் இப்பணிக்கான கணக்கெடுப்பு படிவம் (Enumeration Form) இன்று (04.11.2025) முதல் வீடு வீடாக வாக்காளர்களுக்கு வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. அவ்வாறாக, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதியில் 2,35,272 வாக்காளர்களுக்கு 238 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், பெரம்பூர் சட்டமன்ற தொகுதியில் 2,97,526 வாக்காளர்களுக்கு 284 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் 2,90,653 வாக்காளர்களுக்கு 238 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதியில் 2,40,466 வாக்காளர்களுக்கு 240 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், திரு. வி.க. நகர் சட்டமன்ற தொகுதியில் 2,23,571 வாக்காளர்களுக்கு 206 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், எழும்பூர் சட்டமன்ற தொகுதியில் 1,97,465 வாக்காளர்களுக்கு 169 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், இராயபுரம் சட்டமன்ற தொகுதியில் 1,98,576 வாக்காளர்களுக்கு 181 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் 1,80,341 வாக்காளர்களுக்கு 174 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், சேப்பாக்கம்-திருவல்லிகேணி சட்டமன்ற தொகுதியில் 2,40,087 வாக்காளர்களுக்கு 220 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதியில் 2,38,374 வாக்காளர்களுக்கு 239 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், அண்ணாநகர் சட்டமன்ற தொகுதியில் 2,80,422 வாக்காளர்களுக்கு

253 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதியில் 2,85,947 வாக்காளர்களுக்கு 270 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதியில் 2,73,717 வாக்காளர்களுக்கு 254 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், தியாகராயநகர் சட்டமன்ற தொகுதியில் 2,35,497 வாக்காளர்களுக்கு 229 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், மைலாப்பூர் சட்டமன்ற தொகுதியில் 2,69,260 வாக்காளர்களுக்கு 262 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், வேளச்சேரி சட்டமன்ற தொகுதியில் 3,17,520 வாக்காளர்களுக்கு 261 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் என 16 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 40,04,694 வாக்காளர்களுக்கு 3,718 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வீடுவீடாக சென்று கணக்கீட்டுப் படிவம் வழங்கும் பணிகள் இன்று தொடங்கி நடைபெற்று வருகிறது.

பின்னர், பூர்த்தி செய்யப்பட்ட கணகீட்டுப் படிவங்கள் அனைத்தும் 04.12.2025-க்குள் மீள பெறப்படும். அந்தந்த வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் வழங்கப்படும் இரட்டை படிவங்களை, பொது மக்கள் முழுமையாக பூர்த்தி செய்து கையொப்பத்துடன், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மீள வரும்போது சமர்ப்பித்திட வேண்டும். அவ்வாறு பெறப்படும் படிவங்களில் உள்ள வாக்காளர்களின் பெயர்கள் மட்டுமே வரைவு வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படும். எனவே, வாக்காளர்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு முழுமையாக ஒத்துழைப்பு நல்கி, இத்திருத்தப்பணியினை சிறப்பாக முடித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முன்னதாக, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம் தொடர்பாக, சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட தொகுதிவாரியான வாக்குச்சாவடி முகவர்களுடனான (BLAs) ஆலோசனை கூட்டம் சம்மந்தப்பட்ட வாக்காளர்த பதிவு அலுவலர்களால் இன்று (04.11.2025) நடத்தப்பட்டது.

மேலும், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் குறித்த சந்தேகங்கள் ஏதும் இருப்பின், 1950 என்ற கட்டணமில்லா தேர்தல் கட்டுப்பாட்டு தொலைபேசி எண்ணை வாக்காளர்கள் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**